


ஹஸ்ரத் முஹைஹயுதின்அல்- கலீபஃத்துல்லாஹ்
முனீர் அஹ்மத் அஜீம் (AS)


**13 oct 2017**

(22 முஹர்ரம் ஹிஜ்ரி 1439)

# ஜுமுஆ பேருரை

## தலைப்பு :

**பிரார்த்தனைகள்- பாகம் 3**


**மொழியாக்கம்/Translation**
**TJSI பத்திரிகை குழுமம்- TJSI publication group**
**வெளியீட்டு**
**அமீர்,**
**ஜமாஅத் தமிழ்நாடு**



**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**




**உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு ஹஸ்ரத் கலீபத்துல்லாஹ்(AS) அவர்கள் தஷ்ஹத் தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதி "பிரார்த்தனைகள் (பாகம் 3)" என்ற தலைப்பில் ஜுமுஆ பேருரை நிகழ்த்தினார்கள்**

அல்லாஹ் ஸுப்ஹானஹ் த ஆலாஹ் வின் அருளால், உலகெங்கிலும் உள்ள ஜமாஅத் உல் சஹீஹ் உல் இஸ்லாமின் அனைத்து உறுப்பினர்களின் நன்மைக்காகவும், துவாவைப் பற்றிய தொடர்ச்சியான குத்பா பிரசங்கங்களை உங்களுக்கு வழங்க எனக்கு இறைவன் பெரும் வாய்ப்பளித்துள்ளான்.

மேலும், அல்லாஹ் தனது அருட்கொடைகளை என்மீது தொடர்ந்து செலுத்தி, அதிகமான துவாக்களையும் எனக்கு கற்றுத் தந்து, அதன்மூலம் அவன் வழங்கும் ஆத்மீக பொக்கிஷங்களின் நன்மைகளை உலகெங்கிலும் வாழும் எனது ஸஹாபாக்கள் அனைவரும் தங்களது அன்றாட வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளவும் உதவி புரிந்துள்ளான், இன்ஷாஅல்லாஹ்!

2000 ஆம் ஆண்டில் இறை வெளிப்பாடுகள் எனக்கு வரத் தொடங்கியதிலிருந்து, அல்லாஹ் துவாக்கள் பலவற்றை எனக்கு கற்றுத் தந்ததன்மூலம், பல தாங்கிக் கொள்ளமுடியாத இன்னல்களை எதிர்கொண்ட இந்த எளிய ஊழியனுக்கும், அவனுடைய உண்மையான சீடர்களுக்கும் தனது ஆதரவைக் கொண்டும் ஆறுதல்களைக் கொண்டும் உதவிகள் புரிந்தான். மேலும் அல்லாஹ்வின் அருளினால், அவன் நம்மிடத்தில்தான் இருக்கின்றான். மேலும் இத்தகைய துவாக்கள் அனைத்தும் நிச்சயமாகச் செயல்படுவது மட்டுமல்லாமல், எனது உண்மையான விசுவாசிகளுக்கு மிகவும் சக்திவாய்ந்த வலிமையான ஆயுதமாகவும் இருக்கிறது.

நமது மிகப்பெரிய ஆயுதம் பிரார்த்தனையாகும். மேலும், இன்று அல்லாஹ்வின் அருளால், அவன் எனக்கு அறிவித்த சில துவாக்களை திரும்பவும் நான் உங்களுக்கு முன்பாக வைக்கின்றேன். இது என் சீடர்களுக்கும், மற்ற எல்லா முஸ்லீம் சகோதர சகோதரிகளுக்கும் மிகுந்த பயன் அளிப்பதாக இருக்கும். ஏனென்றால், நீங்கள் என்மீது நம்பிக்கை கொள்கிறீர்களோ இல்லையோ, நான் இந்த ஆன்மீகப் பொக்கிக்ஷத்தை உங்களுடன் பகிர்ந்துக்கொண்டே ஆகவேண்டும். உங்களிடையே எடுத்துரைக்கப்படும் இவ்வாறான துவாக்கள் நம் ஒவ்வொருவருக்கும் இரட்சிப்பு, அமைதி, சமாதானம் ஆகியவற்றை தருகிறது. நான் இப்பொழுது இந்த துவாக்களை உங்களுக்கு வழங்குகிறேன்:

**"ரப்பனாஹ் லா தஜல்னா தவ்மத்தல் லில் கவ்மில் ஜாஹிலீன்"**

**பொருள்** :-**"எங்கள் இறைவா! அறியாமை மற்றும் ஆதிக்கம் செலுத்தும் மக்களுக்கு இரையாக்காது இருப்பாயாக."**

அடுத்து,

**"வஜ்ஜல் அ:ஃபதத்தம் மினன் நாசி தஹ்வீ இலைஹிம்"**

**பொருள்** :-**"மக்களின் உள்ளங்களை நம்மை நோக்கி திருப்புவாயாக!"**

இது நிச்சயமாக நம் முன்னேற்றத்திற்கான ஒரு நல்ல செய்தியாகும். இந்த நூற்றாண்டின் எளியவனை நோக்கி, அல்லாஹ் இந்த மக்களின் இருதயங்களை எவ்வாறு திருப்பிவிட்டான் என்பதே ஒரு மிகப்பெரிய தெளிவான சான்றாகும். மேலும், எத்தனை நாடுகளிலுள்ள மக்கள் இந்த எளிய ஊழியனை (அல்லாஹ்வின்) மற்றும் ஜமாத் உல் சஹீஹ் அல் இஸ்லாமை அல்லாஹ்வின் அருளால் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை எங்கள் வலைத்தளத்தில் பாருங்கள்! அல்ஹம்துலில்லாஹ் யா ரப்பில் ஆலமீன்!

நான் 2001 ஆம் ஆண்டில் நிஜாம்-ஜமாஅத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதன் அடிப்படை என்னவெனில் ,இறைவெளிப்பாடுகள் மற்றும் இறைப்பண்புகள் இறைவனிடமிருந்து எனக்கு கிடைத்தக் காரணத்தினாலே ஆகும். அந்நேரத்தில் அமீராக இருந்த அந்த குறிப்பிட்ட நபரின் வெறுப்பு மற்றும் பொறாமையினால் தயாரிக்கப்பட்ட தவறான அறிக்கையின் காரணமாக இது நிகழ்ந்தது.

பின்,அல்லாஹ் இந்த துவாக்கள் மூலம் எனக்கு அருள்புரிந்து ஆறுதல் அளித்தக் காரணத்தால், நிச்சயமாக நான் மிகவும் பாக்கியமுடையவனாக இருக்கிறேன். மேலும், பிற நாடுகளிலுள்ள மக்கள் அல்லாஹ்வுடைய இந்த எளியஊழியனைஏற்றுக்கொள்வதற்கும், இந்நூற்றாண்டிற்குரிய அல்லாஹ்வின் கலீ:ஃபாவாகிய என்னை நோக்கி மக்களின் உள்ளங்கள் திரும்புவதற்கும், இந்த ஜமாத்தை என்னுடன் சேர்த்து வளர்ப்பதற்கும் அல்லாஹ்வே காரணமாக இருக்கின்றான். அல்ஹம்துலில்லாஹ் யா ரப்பில் ஆலமீன்!

அல்லாஹ்வின் அருளால், ஜமாஅத் உல் சஹீஹ் அல் இஸ்லாம் இந் நாடுகளுக்கு சென்று அடைந்ததும், அல்லாஹ்வின் இந்த எளிய ஊழியனை அந்த மக்கள் ஏற்றுக்கொண்டதும் ஒரு மிகப்பெரிய இறை உதவியாகும். மேலும், அல்லாஹ்வின் அருளால், ஜமாஅத் உல் சஹீஹ் அல் இஸ்லாம் சட்டவிரோதமாக அல்லாமல் இறை ஜமாத்தாகப் பதிவு செய்யப்பட்டு அதிகாரப்பூர்வமாகவும், சட்டபூர்வமாகவும் செயல்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்! மேலும், அல்லாஹ்வின் அருளால், வெவ்வேறு நாடுகளில் உள்ள ஜமாத் உல் சஹீஹ் அல் இஸ்லாத்தின் உறுப்பினர்கள் யாவரும் அனைத்து துன்புறுத்துதல்களுக்கும், கடினமான சோதனைகளுக்கும் இடையிலும் சஹீஹ் இஸ்லாத்தின் செய்தியை உலகெங்கும் பரப்புகின்றனர். எனினும், அவர்கள் நம்பிக்கை இழக்கவோ, பின்வாங்கவோ அல்லது, அல்லாஹ்வின் இந்த எளிய ஊழியனின் கைகளில் அவர்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழியை (பைய்யத்) முறித்துக் கொள்ளவோ செய்யக்கூடாது. எனவே, நான் பின்வரும் துவாவை என் அன்பான ஸஹாபாக்களுக்கு முன்வைக்கிறேன்:

**"ரப்பிஷ் ஹிஸ்னி ஃப இன்னல் கவ்மத் தக்ஹஸோனனி ஷுக்ரா"**

**பொருள்** :-""என் இறைவா, நீ என்னை இந்த பரிகசிக்கும் மக்களிடமிருந்து காப்பாற்றுவாயாக!"

2001 ஆம் ஆண்டில், எனக்கு எதிராக திரும்பிய முன்னாள் அமீர் மற்றும், அவரது முல்லாக்களினால் மொரிஷியஸில் உள்ள அனைத்து அஹ்மதிய்யா மதூதிகளிலும் (ரீபட்) புயல் மிகவும் தீவிரமடைந்து இருந்தது. அந்நேரத்தில், எனக்கு கிடைத்த இறை வெளிப்பாடுகளின் மீது அவர்கள் மிகவும் ஏளனம் செய்தார்கள். மேலும், அவர்கள் எங்களுக்கு சலாம் கூறாமல் புறக்கணித்த நிலையில், என்னை மற்றும் என்மீது ஈமான் கொண்டவர்கள் யாவரையும் எந்த குடும்பச் செயல்பாடுகளுக்கும் அழைக்கக்கூடாது என்றும் முடிவெடுத்தனர். மேலும், மக்களுக்கு விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அவர்கள் கீழ்படியாமல் இருக்கும்பட்சத்தில், அவர்களை வெளியேற்றுவதற்கும் அவர்களுக்கு எதிராக ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், இவ்வாறான நிலை தற்போதைய அமீர் மற்றும், அவரது நிர்வாகக் குழுவால் இன்றும் தொடர்ந்து நீடித்து வருகிறது. அந்நேரத்தில்தான், 2001 ஆம் ஆண்டில், அல்லாஹ் எனக்கு இந்த துவாவை வெளிப்படுத்தினான்:

**"ரப்பி அரினி அய்யத்தம் மினஸ்ஸமா"**

**பொருள்** :-""என் இறைவா ! வானத்திலிருந்து ஓர் அடையாளத்தை எனக்குக் காட்டுவாயாக!"

அதாவது, அல்லாஹ் எனக்கு காட்டும் அடையாளங்களைக் கொண்டு, அவன் தான் தெரிந்தெடுக்கப்பட்ட அடியாருக்கு மகத்தான நற்கூலியை வழங்குவான். அதன்பின்னர், அல்லாஹ் மற்றொரு துவாவையும் வெளிப்படுத்தினான்:

**"அரி**
**` னி ஸல்ஸலதஸ் ஸ-ஆதி"**

**பொருள்** :-"**வாக்குறுதி அளித்த மகத்தான நிகழ்ச்சியைக் காட்டுவாயாக"**
அல்லது இதனை இவ்வாறும் மொழிபெயர்க்கலாம்:

**"இவ்வாறு வரப்போகும் மகத்தான நிகழ்ச்சியை எனக்குக் காட்டுவாயாக."**

அஹ்மதிகளின் இதயத்தில் (எனக்கு எதிராக) வெறுப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, மொரிஷியஸில் உள்ள அஹ்மதியா ஜமாத் நடத்திய வெறுப்புணர்வுப் பிரச்சாரங்களைக் கருத்தில் கொண்டு இந்த எளிய ஊழியனை அல்லாஹ் புறக்கணிக்கவோ, கைவிடவோ இல்லை. மேலும் எனக்கு வரும் இவ்விறை வெளிப்பாடுகள் யாவும் பொய்யானவைகள் என்று எண்ணுகிறார்கள். அதற்கு ஒருப்படி மேலேயும் போய், இவ்விறை வெளிப்பாடுகள் அனைத்தும் ஷைத்தானிய வெளிப்பாடுகள் என்றும் உறுதி செய்தார்கள்-நவூதுபில்லாஹ்! நிச்சயமாக, அவர்களுடைய இந்த தீய பேச்சுகள் என்னைத் துன்புறுத்தியதால், மேலும் அதிகமாக நான் பிரார்த்தனையில் ஈடுபட்டதன் காரணத்தால், அல்லாஹ் இதனை எனக்கு அறிவிக்கின்றான்

(அதாவது, நான் அவனிடம் கூறுவதற்காக அவனே சில துவாக்களை எனக்கு வெளிப்படுத்தினான்):

**"ரப்பி ப∴ர்ரிக் பைனஸ் ஸாதிக்கீன் வல் கத்தபீன் அன்த தர குல்ல முஸ்லிஹீன் வஸ் ஸாதிக்கீன்"**

"என் இறைவா! உண்மை மற்றும் பொய்யிற்கு இடையில் உள்ள வித்தியாசத்தை எங்களுக்கு காட்டுவாயாக; நீயே உண்மையாளர்களையும், நன்மை செய்பவர்களையும் அறிபவனாக இருக்கின்றாய்."

இந்த இறைவெளிப்பாடு, தங்களை உண்மையாளர்களாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் சூழ்ச்சியாளர்க்கெல்லாம் ஒரு மறுப்புரையாகவே செயல்படுகிறது. அல்லாஹ் (சுபஹ்), இந்த துவாவின் மூலம், இவ்வுண்மையை நாம் புரிந்து கொள்ளச்செய்வதோடு, அவனே உண்மையாளர்களுக்கும் பொய்யர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தையும் வெளிப்படுத்திக்காட்டுகிறான். எனவே, இவர்கள் (புண்படுத்தும்) தீயச் சொற்களால் என்னை இழிவுபடுத்தியும், பொய்யனாக என்னை அடையாளப்படுத்தியும் வந்ததால், அல்லாஹ் இந்த துவாவை எனக்கு வெளிப்படுத்தி தந்தான். பின்னர், அல்லாஹ் என் நாவில் ஒரு துவாவை வரவழைத்து, அதனை பலமுறை என்னை ஓதச் செய்தான்:

**"ரப்பி லா தவ்கினி மினஸ் ஸியாதித் திக்ரா"**

**பொருள்** :-""என் இறைவா! என்னை இழிவுபடுத்தும் எதனையும் விட்டு விடாதிருப்பாயாக"

எனவே, இந்த துவாவின் மூலம் அல்லாஹ் (ஸுப்ஹ) என்னை இழிவுப்படுத்தக் கூடிய அனைத்தையும் மூடிவிடுவதாக எனக்கு உறுதி அளித்துள்ளான் (அதாவது, அவன் இழிவுபடுத்துபவரின் அடிப்படை ஆதாரத்தையே அழித்துவிடுவான்). எனவே, **அல்லாஹ்வின் புறத்தில் இருந்து ஒரு தூதர் வருகின்ற வேளை தான், லைலத்துல் கதர் ஆகும்.** அவ்வேளையில், இறைவெளிப்பாடுகள் வெளிப்படையானதாகவே இருக்கும். மேலும், விண்ணுலகில் ஏற்படும் ஒளியால் சத்தியத்தை தேடுபவர்களுடைய உள்ளங்களில் ஒரு வெளிச்சம் ஏற்படும். அதே நேரத்தில், நீங்கள் முனா∴பிக்குகளின் உண்மையான முகங்களைக் கண்டால், தங்களின் முதுகுகளை இறை வெளிப்பாடுகளைக் கண்டு திருப்பும்போது, எவ்வாறு வெறுப்பையும், பொறாமையும் அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள் என்பதையும் காணலாம். மேலும், அவர்கள் தீய சூழ்ச்சிகளை உருவாக்கி அல்லாஹ்வின் ஒளியை அணைத்துவிட முயற்சிக்கின்றனர். ஆனால், நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் ஒளியை அணைத்துவிட முடியாது. அவர்களுடைய சுவாசமும் நின்றுபோகலாம், அவர்களுடைய வாழ்வும் முடிந்துப்போகலாம். ஆனால், அல்லாஹ் தன் ஒளியைப் பரிபூரணமாக ஆக்கியே தீர்வான்.

எனவே, (நயவஞ்சகர்களான) இவர்களுக்கும், கா∴பிர்களுக்கும் இடையே எந்த வேறுபாடு இல்லை. இவர்களும் நிராகரிப்பவர்களின் அதே பிரிவிலேயே காணப்படுகின்றனர். அல்லாஹ்வுடைய ஒரு தூதரின் வருகையின் போதுதான், அல்லாஹ்வின் அடியார்களுக்கு எதிராகப் பகைமைகள் வெளிப்பட்டு தீயச் சூழ்ச்சிக்கள் உருவாக ஆரம்பிக்கும். அப்போதுதான்,

நயவஞ்சகர்கள் மற்றும் நிராகரிப்பாளர்களின் உண்மையான முகங்களை உங்களால் அறிந்து கொள்ளமுடியும். மேலும், இதன்பின்னர் அல்லாஹ்வின் உதவி வருவதை நீங்கள் காணலாம். அல்லாஹ், இந்த மக்களை அவர்களுடைய செல்வங்களாலும், பிள்ளைகளாலும், மனைவிகளாலும் சிறிதுசிறிதாக, படிப்படியாக அவர்களுக்கு என்ன நடக்கிறது என்று அறியாத நிலையிலேயே அவர்களை அழிவை நோக்கி இட்டுச் செல்கின்றான்.

இத்துடன் இதனை நான் இன்று முடித்துக்கொள்கிறேன். இன்ஷாஅல்லாஹ், அடுத்த வாரமும் இதே தலைப்பில் (துவா) நான் தொடர அல்லாஹ் தௌஃபீக் செய்வானாக, அமீன்!

**"அல்லாஹ்வே! என் இதயத்தை ஆட்சி செய்கின்ற அரசர்களின் அரசனே, என்னை உன் நன்மதிப்பிற்குரிய வட்டத்திற்குள் கொண்டு வருவாயாக! அத்தகைய நன்மதிப்பால் உன்னை புகழ்ந்துப் பாடவும், உன்னுடைய பகைவர்களை இகழ்ந்துரைக்கவும் செய்வாயாக!"**

**"உன்னுடைய கண்களுக்கும், உன் நேசம் மற்றும் கருணையின்பால் உன்னுடைய நல்லடியார்களின் கண்களுக்கும் அர்த்தமற்றவனாக இருந்த என்னை அர்த்தமுடையவனாக ஆக்குவாயாக,**

**ஆமீன்!"**